FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8301698

1. District மாவட்டம் : Thiruvallur. PS: VADA, காவல்நிலையம் Year ஆண்டு 2026 FIR No முதஅ எண் 171/2026/TVL Date நாள் 24.10.2026 16.30 hrs

2 (i) Act சட்டம் The Prevention of Corruption Act 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள் 7 (a)

(ii) Act சட்டம் : Sections பிரிவுகள்

(iii) Act சட்டம் : Sections பிரிவுகள்

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 23.10.26 15.00 hrs Date to : நாள் வரை 23.10.26 21.30 hrs

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.10.2026 Time : நேரம் 23.30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.10.2026 Time : நேரம் 16.30 hrs.

4 Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 50 km, North,

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி C/o the Ponneri Municipality, Ponneri, Thiruvallur Dt,

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6 Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் D. Satyanarayana (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Zonal Deputy Tahsildar. (g) Address : முகவரி Zonal Deputy Tahsildar, Thiruvallur Dt, Tk Dy. T.C.O, Taluk office, Thiruvallur Dt, Thiruvallur District.

7 Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) Tr.V. Kumar, s/o Veerapan, Manager, Ponneri Municipality, Thiruvallur Dt

(2) Tmt. K. Mohana w/o Kandharam, No.11, Lakshmi Amman Koil Street, Thuravadi, Ponneri Tk, Thiruvallur Dt.

8 Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டானரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— NIL —.

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிநீது மேற்கொண்டது :-

அன்று 24.10.2026 அன்று காலை 16.30 மணிக்கு, S. மாலா, காவல் ஆய்வாளர் அவர்கள் நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திரு. C. மைக்கேல், தலைமை காவல் காண்காணிப்பாளர், வடக்கு மண்டலம், திருவள்ளூர் அவர்கள் வழங்கிய உத்தரவின் பேரில், திரு. D. சந்திர சேகரன், தலைமை வட்டாட்சியர், திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம், திருவள்ளூர் / மாவட்ட தலைமை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), திருவள்ளூர் அவர்களின் கொடுத்த புகார் மனு மீது விசாரணை மேற்கொண்டதில் பின்வருமாறு.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24.10.26

Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. மாலா 24/10/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

Name: பெயர் S. MALA,
Rank: நிலை ..... No. எண்.....
Inspector of Police.
VOAC, Thiruvallur.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL. u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous..)

அனுப்புநர் திரு.D.சத்தியநாராயணன், துணை வட்டாட்சியர், திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம், திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொறுப்பு), திருவள்ளூர் பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.23.10.2026.பொருள்:- திடீர் ஆய்வு - திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நகராட்சி அலுவலகத்தில் திடீர் கூட்டுத்தணிக்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை துணை கண்காணிப்பாளர், திருவள்ளூர் அவர்களுடன் மேற்கொண்டது- நடவடிக்கை கோரி கடிதம் கொடுப்பது தொடர்பாக.பார்வை:- எனது செயல்முறைகள் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் (இ) காஞ்சிபுரம் அவர்களின் தொலைபேசி செய்தி நாள்.23.10.2026 (காலை 10.00 மணி) கடிதத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆய்வு தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.23.10.2026, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் கையூட்டாக பணம் பெற்று வருவதாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் அவர்களுக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், கூட்டு தணிக்கை மேற்கொள்வதற்காக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் (இ) காஞ்சிபுரம் அவர்களின் தொலைபேசி செய்தி நாள்.23.10.2026 (காலை 10.00 மணி) கடிதத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆய்வு தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.23.10.2026-ன்படி கூட்டு தணிக்கை ஆய்வு மேற்கொள்வதற்காக D.சத்தியநாராயணன் துணை வட்டாட்சியர், திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம், திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம் ஆகிய என்னை கூட்டு தணிக்கை செய்ய நியாமனம் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டதின்பேரில், இன்று 23.10.2026-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருத்துறை திடீர் கூட்டுத்தணிக்கைகள் செய்ய நான் மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.R.ஜெயக்குமார், காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மாலை சுமார் 15.00 மணி சுமார் 21.30 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் கூட்டுச்சோதனையின்போது அலுவலகத்தில் உள்ளே இருந்த திருமதி.K.மோகனா, வயது-52, க/பெ.காந்தராஜ்,

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous..)

(பொன்னேரி எட்டாவது வார்டு கவுன்சிலர்)இ எண்.11, லட்சுமி அம்மன் கோயில் தெரு, திருஆயர்பாடி, பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என கருதுவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் அந்த தொகை ரூ.10,200/- வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேலாளர் திரு.குமார் அவர்களின் செல்போனில் G-Pay மூலமாக ரூ.1,43,500/- பணம் பரிமாற்றம் நடைபெற்றுள்ளது. இதற்கான 01.04.2026 முதல் 30.09.2026 வரையான G-Pay Statement திரு.குமார் அவர்களின் செல்போனில் download செய்து பிரிண்ட் எடுத்து அவரிடம் கையொப்பம் பெற்று வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பணம் கைப்பற்றப்பட்ட திருமதி.K.மோகனா மற்றும் ஜி-பே மூலம் பணப்பரிவர்த்தனை மேற்கொண்டிருந்த மேலாளர் திரு.குமார் ஆகியோர்களின் வாக்குமூலங்களை நான் விசாரணை செய்து பதிவு செய்தேன். அதேபோல் அவர்கள் தரப்பு விளக்கத்தை அவர்களாகவே என் முன்னால் எழுதி கையொப்பம் செய்து கொடுத்தனர். மேலும் சோதனையின்போது லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என கருதுவதற்கு உரிய முகாந்திரம் இருந்ததால் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.10,200/-ஐ நடவடிக்கை மேற்கொள்ள தங்களிடம் ஒப்படைக்கிறேன். திரு.D.சத்தியநாராயணன், துணை வட்டாட்சியர், திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம், திருவள்ளூர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொறுப்பு), திருவள்ளூர். இணைப்பு 1.திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண.13187/2026/ அ3, நாள்.23.10.2026. நகல். 2.சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.10,200/- (பத்தாயிரத்து இருநூறு ரூபாய்) 3.செயல்முறை ஆணை அசல்.4.கைப்பட எழுதிக்கொடுத்த விளக்கக்கடிதங்கள் (2), 5.மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் (2) மற்றும் 6.அலுவலகத்தின் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல்கள். அதில் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சு.ஜெயக்குமார் அவர்களால் வழக்கு பதிவு செய்ய எனக்கு உத்தரவிடப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. மேலும் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நகராட்சி அலுவலகம் - திடீர் கூட்டுத்தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறையின் விபரம் பின்வருமாறு. இரு துறை திடீர் கூட்டாய்வு குறித்த செயல்முறைகள். முன்னிலை:- திரு.D.சத்தியநாராயணன் நாள்:- 23.10.2026.பொருள்:- திடீர் கூட்டாய்வு- திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் -

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous..)

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சி அலுவலகம். பொன்னேரி - 23.10.2026-ந்தேதி தேதி கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது தொடர்பான- செயல்முறைகள். ஆகியவை - திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் கையூட்டாக பணம் பெற்று வருவதாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர். காஞ்சிபுரம். செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் அவர்களுக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில். கூட்டு தணிக்கைக்காக மேற்கொள்வதற்காக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர். காஞ்சிபுரம். செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் (இ) காஞ்சிபுரம் அவர்களின் தொலைபேசி செய்தி நாள்.23.10.2026 (காலை 10.00 மணி) கடிதத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3. நாள்.23.10.2026-ன்படி கூட்டு தணிக்கை ஆய்வு மேற்கொள்வதற்காக D.சத்தியநாராயணன் துணை வட்டாட்சியர்.திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம். திருவள்ளூர். திருவள்ளூர் மாவட்டம் ஆகிய என்னை கூட்டு தணிக்கை செய்ய நியமனம் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டதின்பேரில். இன்று 23.10.2026-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருத்துறை திடீர் கூட்டுத்தணிக்கைச் செய்ய நான் மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.R.ஜெயக்குமார். காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று 23.07.2026-ந்தேதி மாலை சுமார் 13.00 மணிக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து அரசு வாகனத்தில் புறப்பட்டு மாலை சுமார் 14.45 மணிக்கு பொன்னேரி இரயில்வே பாலம் அருகே வந்து பொன்னேரி-பழவேற்காடு சாலையில் அமைந்துள்ள பொன்னேரி நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் வந்து வாகனங்கத்தை நிறுத்திவிட்டு இறங்கி நடந்து சென்று. ஆங்காங்கே குழுவினருடன் பொன்னேரி நகராட்சி அலுவலகத்தை கண்காணித்துக்கொண்டிருந்தபோது. மேற்படி பொன்னேரி நகராட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் உள்ளே சென்று வேலைகளை முடித்து அலுவலகத்திற்கு சென்று வருவதும் போவதுமாக இருந்தார்கள். அப்போது மாலை சுமார் 15.00மணியளவில் பொன்னேரி நகராட்சி அலுவலகத்திற்குள்ளே குழுவினருடன் சென்றபோது. அலுவலகத்தின் வெளியே வராண்டாவில் நின்றுக்கொண்டிருந்த பொதுமக்களையும். சிலர் விஜிலென்ஸ்

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous..)

போலீஸார் என அடையாளம் தெரிந்து வெளியே ஓட முயற்சி செய்தவர்களையும் உள்ளே அழைத்துவந்து நகராட்சி அலுவலகத்தில் இருந்த நாற்காலிகளில் அமரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர்கள் அனைவரையும் குழுவினர் உதவியுடன்இருக்கையில் அமரசெய்தோம். பின்னர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் ஆணையர் அறைக்கு சென்று பார்த்தபோது ஆணையர் அவர்கள் இல்லை. ஆணையர் அவர்கள் இல்லாதது தொடர்பாக அலுவலகத்தில் இருந்தமேலாளர் அவர்களை அழைத்து அவரிடம் நான் அறிமுகம் செய்துக்கொண்டு ஆணையர் பற்றி விசாரித்தபோது, ஆணையர் திருமதி.ப.நாளயினி என்றும் அவர் கடந்த 15.03.2026 முதல் பொன்னேரி நகராட்சியில் ஆணையராக உள்ளதாகவும், தொண்டையில் கட்டி காரணமாக கடந்த 07.09.2026யிலிருந்து மருத்து விடுப்பில் சென்றுள்ளதாகவும், தற்போது திருநீன்றவூர் நகராட்சி ஆணையர் திருமதி.A.V.கீர்த்தனா அவர்கள் 30.09.2026 முதல் பொறுப்பு ஆணையராக இருந்து வருவதாகவும் தெரிவித்தார். பொறுப்பு ஆணையர் அவர்கள் இந்த நகராட்சி அலுவலகத்திற்கு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வந்து செல்வார் என்றும் தெரிவித்தார். ஆணையர் இல்லாத நேரத்தில் முழு பொறுப்பு அலுவலராக திரு.ருத்ரகோட்டி, நகராட்சி பொறியாளர் அவர்கள் இருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர், அலுவலகத்தில் இருந்த பொதுமக்களை ஒரு கேபினின் ஒரு பக்கமாக இருக்குமாறும் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஒன்று திரட்டி ஒரு கேபினின் ஓன்றாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டது. பின்னர், முதல் மாடியில் இருந்த பொறுப்பு அலுவலரான திரு.ருத்ரகோட்டி, நகராட்சி பொறியாளர்அவர்கள் பொறியாளர் பிரிவு அறையில் அமர்ந்திருந்தார். அவரிடம் என்னை அறிமுகம் செய்துக்கொண்டு, என்னுடன் வந்திருந்த காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரை அறிமுகம் செய்து வைத்து அவர்களுடைய அடையாள அட்டையை காட்டியும், சுய பரிசோதனை செய்து காட்டியும். மேற்படி அலுவலகத்தை கூட்டுத் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தெரிவித்து ஒத்துழைப்பு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.அவரை பற்றி விசாரிக்க அவர் பெயர் திரு.K.ருத்ரகோட்டி, வயது-58, த/பெ.கேசவன் என்றும் அவர் பொன்னேரி நகராட்சியில் நகராட்சி பொறியாளராக பிப்ரவரி/2024 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் வீட்டு எண்.8/376, நடேசன் தெரு, பொழிச்சலூர், சென்னை-64 என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்துவருவதாகவும், அலுவலகத்தை [illegible] எனவும் தெரிவித்தார்.பின்னர் அலுவலக

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous..)

பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தில் இருந்த தனி பாதுகாவலர் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:-

நகராட்சி அலுவலகத்தில் தரைத்தளத்தில் பொது பிரிவில்இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.V.குமார், வயது-48, த/பெ.வீரப்பன், மேலாளர், பொன்னேரி நகராட்சி, பொன்னேரி	-	-
2	திருமதி.S.மாலதி, வயது-42, க/பெ.ஏழுமலை, இளநிலை உதவியாளர்.	ரூ.80/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.R.தியாகராஜன், வயது-40, த/பெ.ராகவன், பதிவுறு எழுத்தர்.	ரூ.360/-	மதிய உணவு சாப்பிடுவதற்காகவும் சொந்த செலவிற்காகவும் வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
4.	திருமதி.V.ஜெயந்தி, வயது-50, க/பெ.வெங்கடகுமார், அலுவலக உதவியாளர்.	ரூ.100/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
5.	திருமதி.K.U.ஸ்ரீலக்ஷ்மி, வயது-45, க/பெ.ரமேஷ், கணினி இயக்குபவர், ஒப்பந்த தொழிலாளர்.	ரூ.50/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
6.	செல்வி.E.பவானி, வயது-43, த/பெ.ஈஸ்வரன், பிறப்பு இறப்பு பதிவு செய்பவர், ஒப்பந்த தொழிலாளர்.	ரூ.120/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நகராட்சி அலுவலகத்தில் முதல் தளத்தில் அமைந்துள் பொறியியல் பிரிவு அறையில் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.K.ருத்ரகோட்டி, வயது-58, த/பெ. கேசவன், நகராட்சி பொறியாளர்	ரூ.120/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous..)

2.	திரு.E.பகுபதி, வயது-45, த/பெ.எத்திராஜ், பொதுப்பணி மேற்பார்வையாளர்.	ரூ.440/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.V.சுந்தர், வயது-52, த/பெ.வேலாயுதம், இளநிலை உதவியாளர், பொறியியல் பிரிவு	ரூ.400/-	பெட்ரோல் செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
4.	செல்வி.M.மணிமலர், வயது-23, த/பெ.முருகன், பணி ஆய்வாளர்,	ரூ.2,100/-	தன்னுடைய சொந்த ஊர் ஈரோடு மாவட்டம் என்றும், தான் பொன்னேரி KLK பெண்கள் தங்கும் விடுதியில் தங்கி வேலை செய்து வருவதாகவும். விடுதியில் பணம் வைக்க பாதுகாப்பு இல்லாததால் இந்த பணத்தை பர்ஸில் வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
5.	திருமதி.S.புவனேஸ்வரி, வயது-51, க/பெ.சேகர், அலுவலக உதவியாளர்,	--	
6.	திருமதி.K.விஜயா, வயது-46, க/பெ.ஜெயக்குமார், தட்டச்சர், ஒப்பந்த பணியாளர்	ரூ.15/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதார பிரிவு அறையில் இருந்த பணியாளர்களின்

விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.R.ரவி, வயது-50, த/பெ.ராமன், தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர் (தினக்கூலி)	ரூ.40/-	தன்னுடைய சொந்த செலவிற்கா வைத்திருந்த பணம் என் தெரிவித்தார். எனவே அந்த பண அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL. u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous..)

மேலும் நகராட்சி அலுவலகத்தில் வருவாய் பிரிவில் [illegible] என்பவர் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் இன்று அவர் அலுவலகம் சென்று சென்றுள்ளதாகவும் நகராட்சி பிரிவில் தற்போது பணம் [illegible] இல்லையென்றும். திருவள்ளூர் நகராட்சியில் பணிபுரியும் திருமதி [illegible] நகராட்சி ஆய்வாளராக இருப்பதாகவும். அவர் பொன்னேரி நகராட்சி அலுவலகத்திற்கு வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டும் வருவதாகவும் நகராட்சி பொறியாளர் அவர்கள் தெரிவித்தார்

நகராட்சி அலுவலகத்தில்இருந்த தனிநபர்கள் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.K.ஜனார்தனன். வயது.39. த/பெ.கிருஷ்ணன். எண்.8. காந்தி தெரு. பொன்னேரி. திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.18,000 -	தான் பொன்னேரியிலுள்ள LNG கம்பெனி எதிரில் அமைந்துள்ள SK Technology- RO Service Center-ல் வேலை செய்து வருவதாகவும். எனது ஓனர் பொன்னேரி நகராட்சி அலுவலகத்தில் உள்ள RO மெஷின் சர்வீஸ் செய்வதற்காக தன்னை அனுப்பியதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரின் பேன்ட் பாக்கெட்டில் ரூ.18,000/- இருந்தது. அப்பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது. அந்த பணம் வேண்பாக்கத்தில் ஒரு கஸ்டமர் வீட்டில் புதிய வாட்டர் Installation செய்ததற்கு. அவர் கடை உரிமையாளரிடம் கொடுக்குமாறு ரூ.18,000/- பணத்தை கொடுத்ததாகவும். பின்னர் அங்கு வேலை முடித்துவிட்டு நேராக பொன்னேரி நகராட்சிக்கு RO மெஷின் சர்வீஸ் செய்வதற்காக வந்ததாக தெரிவித்தார். இது தொடர்பாக விசாரணை செய்து உறுதி செய்தபின்னர் அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது விளக்கத்தை கையாட எழுதி கொடுத்தார்.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous..)

2.	திருமதி.K.மோகனா, வயது-52. க/பெ.கோந்தராம். எண்.11, லட்சுமி அம்மன் கோயில் தெரு. திருஆயர்பாடி, பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.10,200/-	தான் பொன்னேரியில் வட்டிக்கு பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வருவதாகவும், இன்று பொன்னேரி நகராட்சி அலுவலகம் முன்பு பாதாள சாக்கடை கால்வாய் சீர் செய்து தருவதற்கான வேலையினை நிறுத்தி செய்து தருமாறு நகராட்சி பொறியாளரிடம் தகவல் தெரிவிக்க வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரது பர்ஸில் ரூ.10,200/- இருந்தது. இப்பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது, ஆயுதப்பூஜை கொண்டாட பொருட்கள் வாங்கவும் மற்றும் நகை கடன் வட்டி கட்டுவதற்கு வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். இவரது தம்பி பிராகாஷ் பெயரில் SBM Toilet ஒப்பந்த பணியினை எடுத்து இவரது மகன் சதீஷ் பணிகளை செய்து வருவதாக தெரியவந்தது. மேலும் இன்றைய தினம் 1)நரிக்குறவர் காலனி, 2)வெண்பாக்கம்பள்ளம் மற்றும் 3) இரட்டைமலை சீனிவாசன் தெரு ஆகிய இடங்களில் SBM Toilet முடிக்கப்பட்டு, அதற்குறிய தொகை விடுப்பு செய்வதற்கான கோப்புகள் தயார் செய்யப்பட்டு பொறியியல் பிரிவில் தயாராக இருந்தது. அதற்கான 3 Bill Process & Contractors Journal Voucher (6 தாள்கள்) கைப்பற்றப்பட்டது. அதன் காரணமாக அதிகாரிகளுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என கருத போதிய முகாந்திரம் இருந்ததால் அப்பணம் கைப்பற்றப்பட்டது.
3.	திரு.S.பிரவின்குமார், வயது-33. த/பெ.சூரி, எண்.76, பெருமாள் கோவில் தெரு, சிறுவாக்கம் கிராமம், ஜோதி நகர் போஸ்ட், பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.	--	தான் TWAD Board-ல் ஒப்பந்த பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும், இன்று பொன்னேரி நகராட்சி அலுவலகம் முன்பு பாதாள சாக்கடை கால்வாய் சீர் செய்துக்கொண்டிருந்தபோது, பணியின் காரணமாக Overseer திரு.பகபதி அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது நகராட்சி அலுவலகம் அழைத்து வந்தாக தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதுமில்லை.

4.	திரு.B.வேதகிரி, வயது-57, த/பெ.பாலகண்ணன், எண்.3, டாக்டர் சாம்பசிவம் தெரு, திருவாயற்பாடி, பொன்னேரி காலுக்கோ, திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.100	தான் TWAD Board ல் பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும் இன்று சென்னை நகராட்சி அலுவலகம் முன்பு பாதாள சாக்கடை தொடர்பாக செய்துக்கொண்டிருந்தபோது பணிகளை கண்காணிக்க Overseer அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது நகராட்சி அலுவலகம் அருகிலிருந்து ஒருவர் தெரிவித்தார் அவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ரூ.100 இருந்தது. அப்பணம் குறித்து கேட்டபோது தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார் எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும், பணியாளர்கள் போனில் உள்ள Phone-Pay மற்றும் G-Pay-ல்பண பரிவத்தனைகள் ஆய்வு செய்யப்பட்டது. அப்போது மேலாளர் திரு.குமார் அவர்களின் G-Pay கணக்கில் சந்தேகத்திற்குப்பட்டதாக காணப்பட்ட பணம் பரிவர்த்தனை விவரம்

வ. எண்	செல்போன் உரிமையாளர் பெயர்	பணம் பெற்ற விவரம்	பணம் பெற்ற நாள்	விவரம்
1.	திரு.V.குமார், மேலாளர், பொன்னேரி நகராட்சி, பொன்னேரி. (Cell No.9677773760)	10,000	04.09.2026	இவருக்கு பல்வேறு நபர்களிடமிருந்து G-Pay மூலம் பணம் வந்துள்ளது தெரியவருகிறது. இந்த பணபரிவர்தனை குறித்து அவரிடம் விசாரித்தபோது. அவர் தன்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்திய பணம் என்றார். தன்னுடன் பணிபுரியும் நபர்கள் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்த பணம் என்றும். எனது தம்பி JCB வைத்துள்ளதாகவும். அவருக்கு கொடுக்க வேண்டிய பணத்தை எனக்கு G-Pay மூலம் அனுப்பிய பணம் என்று தெரிவித்தார். இவரது 01.04.2026 முதல் 30.09.2026 வரையான Statement எடுக்கப்பட்டது (15 நாள்கள்).
2.		2,500	03.09.2026	
3.		6,000	10.08.2026	
4.		10,000	15.07.2026	
5.		3,000	02.07.2026	
6.		3,000	02.07.2026	
7.		3,000	23.06.2026	
8.		6,000	20.06.2026	
9.		20,000	19.06.2026	
10.		4,000	17.06.2026	
11.		10,000	06.06.2026	
12.		10,000	26.05.2026	
13.		5,000	26.05.2026	
14.		8,000	26.05.2026	
15.		10,000	17.04.2026	
16.		3,000	13.04.2026	
17.		15,000	10.04.2026	
18.		15,000	10.04.2026	
மொத்தம்		**1,43,500**		

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous..)

மேற்படி G-Pay மூலமாக ரூ.1,43,500/- பணம் பரிமாற்றம் நடைபெற்றுள்ளது. இதற்கான 01.04.2026 முதல் 30.09.2026 வரையான G-Pay Statement திரு.குமார் அவர்களின் செல்போனில் download செய்து பிரிண்ட் எடுத்து அவரிடம் கையொப்பம் பெற்று மேற்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும், விசாரணைக்காக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகைபதிவேடு 1)பொதுப்பிரிவு (3 தாள்கள்),2)பொறியியல் பிரிவு(3 தாள்கள்). 3)வருவாய் பிரிவு நகரமைப்பு பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு (3 தாள்கள்). 4)SBM பணியாளர்கள்(2 தாள்கள்)மற்றும் 5)தூய்மை பணியாளர்கள்(3 தாள்கள்) ஆகியவற்றின் அக்டோபர்/2026 மாதத்திற்கான வருகை பதிவேட்டை நகல் எடுத்து கைப்பற்றப்பட்டது. மேலும் 6)பொறியியல் பிரிவின் கையிருப்பு ரொக்க பதிவேடு (2 தாள்கள்), ரொக்க பதிவேட்டில் பணியாளர்களால் சரியான முறையில் பதிவுகள் மேற்க்கொள்ளப்படவில்லை.

இன்றைய தினம் 23.10.2026 ஆம்தேதி வருவாய் பிரிவில் உள்ள பில் கவுண்டர் கலெக்சன் தொடர்பான விவரங்கள் பற்றி விசாரித்தபோது, அந்த கவுண்டரில் திரு.P.சக்திவேல், வயது-30, த/பெ.பழனி, அலுவலக உதவியாளர் என்பவர் இருந்தார். அவரை விசாரிக்க பில் கவுண்டரில் பில் கலெக்டராக பணப்புரியும் திரு.ராஜ்குமார் என்பவர் தான் கலெக்சன் வேலைகளை பார்பதாகவும், பில் கவுண்டர் லாகின் ID அவர் பெயரில் உள்ளது என்றும், அவர் கள அலுவலாக வெளி செல்லும் நேரங்களில், ஆணையர் உத்தரவின்பேரில் பில் கவுண்டரில் கலெக்சன் பணிகளை தான் செய்து வருவதாகவும், நேற்றைய கலெக்சனை IOB வங்கியில் செலுத்துவதற்காக சென்று பணத்தை செலுத்திவிட்டு, சுமார் 16.30 மணியளவில் நகராட்சி அலுவலகத்திற்கு தான் வந்தபோது திருவள்ளூர் மாவட்ட ஆய்வு குழு அலுவலர் மற்றும் விஜிலென்ஸ் போலீஸார் அலுவலகத்தில் சோதனை செய்துக்கொண்டிருந்தார்கள் என்றும் தெரிவித்தார். இன்று 19.00 மணிக்கு பில் கலெக்சன் முடித்து கணக்குகளை சரிப்பார்த்தபோது, இன்றை 23.10.2026 தேதிக்கான பில் கவுண்டர் BRV Abstract பிரிண்ட் பெறப்பட்டது. அதன்படி 1)Revenue Fund மற்றும் Water Supply & Drainage Fund தலைப்பின் கீழ் ரூ.21,169/- கார்டு Payment ஆக வசூலிக்கப்பட்டுள்ளது. 2) Revenue Fund (4 Bank Accounts) தலைப்பின் கீழ் ரூ.1,58,375/- காசோலையாக வசூலிக்கப்பட்டுள்ளது. 3)Revenue Fund (3 Bank Account) மற்றும் Water Supply & Drainage Fund

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous..)

தலைப்பின் கீழ் ரூ.57,167/- பணமாக வரிலிக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.2,36,711/- அதற்கான BRVAbstract print out (3 தாள்கள்) எடுத்து கைப்பற்றப்பட்டது. கலெக்சன் கவுண்டரில் இருந்த பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.38,010/- இருந்தது. மீதம் தொகை ரூ.19,157/- குறைவாக இருந்தது. மேலாளர் திரு.குமார் அவர்களிடம் குறைவாக உள்ள பணம் குறித்து கேட்டபோது, பில் கலெக்டர் திரு.ராஜ்குமார் அவர்கள் பில்லை உரியவரிடம் கொடுத்துவிட்டு வரி பணத்தை கலெக்சன் செய்து, வங்கியில் செலுத்துவதற்குள் கொடுத்துவிடுவார் என்றும் தெரிவித்தார்.

மேலும், கைப்பற்ற ஆவணங்கள் அனைத்திலும், நகராட்சி பொறியாளர், மேலாளர், துணைக் காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் நானும் கையொப்பம் செய்தோம். சோதனையின்போது நகராட்சி அலுவலகத்தில் திருமதி.K.மோகனா என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என கருதுவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் அந்த தொகை ரூ.10,200/- வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் வருவாய் பிரிவில் உரிய நபர்களிடமிருந்து வரி வசூல் செய்யப்படாமலே பில்கள் போடப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது. மேலும் இந்த அலுவலகத்தில் **"லஞ்சம் வாங்குவதும் குற்றம், லஞ்சம் கொடுப்பதும் குற்றம்"** என்ற விழிப்புணர்வு போர்டு அலுவலகத்தில் வைக்கவில்லை. பணம் கைப்பற்றப்பட்ட திருமதி.K.மோகனா மற்றும் ஜி-பே மூலம் பணப்பரிவர்த்தனை மேற்கொண்டிருந்த மேலாளர் திரு.குமார் ஆகியோர்களின் வாக்குமூலங்களை நான் விசாரணை செய்து பதிவு செய்தேன். அதேபோல் அவர்கள் தரப்பு விளக்கத்தை அவர்களாகவே என் முன்னால் எழுதி கையொப்பம் செய்து கொடுத்தனர்.இச்சோதனையின் போது, பெண்களை பெண் காவலர்கள் கொண்டு சோதனை செய்யப்பட்டது.இந்த திடீர் கூட்டாய்வின்போது எடுக்கப்பட்ட பொருட்கள் அந்தந்த இடத்திலேயே வைக்கப்பட்டும், அலுவலகத்திற்கும், அலுவலகத்திலிருந்த கோப்புகள் மற்றும் பொருட்களுக்கும் எந்தவித சேதாரம் இன்றி சோதனை செய்யப்பட்டது. இந்த சோதனைக்கு அலுவலகத்திலிருந்த அலுவலர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு கொடுத்தனர்.மேற்குறிப்பிட்ட திடீர் இருத்துறை கூட்டுத்தணிக்கையை ஒரு திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையாக விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன்தட்டச்சு செய்யப்பட்டது.இந்த திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையானது, இன்று 23.10.2026-ஆம் தேதி மாலை சுமார் 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு சுமார் 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அதில் 1) திரு.R.ஜெயக்குமார்,

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous..)

காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர். 2)திருமதி.S.மாலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர். 3)திரு.K.ருத்ரகோட்டி, வயது-58, த/பெ. கேசவன், நகராட்சி பொறியாளர், பொன்னேரி நகராட்சி, பொன்னேரி. 4)திரு.V.குமார், வயது-48, த/பெ.வீரப்பன், மேலாளர், பொன்னேரி நகராட்சி,பொன்னேரி. 5) திருமதி.K.மோகனா, வயது-52, க/பெ.காந்தராம், எண்.11, லட்சுமி அம்மன் கோயில் தெரு, திருஆயர்பாடி, பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். 6)திரு.D.சத்தியநாராயணன், துணை வட்டாட்சியர், திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம், திருவள்ளூர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொறுப்பு), திருவள்ளூர். ஆகியோர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள்.

Honoured Madam,

I received the above complaint and proceedings and Registered a case in Thiruvallur V&AC Cr.No.17/AC/2026/TVL u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 24.10.2026 at about 16.30 hrs.

The original FIR, Complaint along with the Joint Surprise check proceedings of Deputy Tahsildar, Thiruvallur TK, I/c District Deputy inspection cell officer, Thiruvallur District, seized un-explained amount of Rs.10,200/- and other enclosed documents are submitted before the Hon'ble Principal District and Sessions Judge, Thiruvallur and other copies are forwarded to Superior Officers.

S. Ilala
24/10/2026
Inspector of police.
V&AC, Thiruvallur.